செ.வெ.எண்.581 நாள்.13.11.2017

# காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் செய்திக்குறிப்பு

## மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது.

ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களின் கனிவான கவனத்திற்கு……….

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்காக செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து இணையதளம் (On-line) மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வயது வரம்பு 18 முதல் 65 வரை. குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1.00 இலட்சம் ஆகும்.

தாட்கோ இணையதள முகவரி http://application.tahdco.com மூலமாக விண்ணப்பிக்க

| வ. எண். | | திட்டம் |
|---|---|---|
| 1. | அ) | நிலம் வாங்கும் திட்டம் |
| | ஆ) | நிலம் மேம்படுத்துதல் – இரு பாலருக்கும் |
| | இ) | துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம் |
| 2. | தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | |
| | அ) | பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல். |
| | ஆ) | தொழில் முனைவோர் திட்டங்கள் |
| 3. | அ) | இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் |
| | ஆ) | மருத்துவ மையம், மருந்தியல், கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் |
| 4. | அ) | சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி |
| | ஆ) | சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி மானிய திட்ட தொகையில் 50% |
| 5. | மாவட்ட ஆட்சியர் விரும்புரிமை நிதி | |
| 6. | மேலாண்மை இயக்குநர் விரும்புரிமை நிதி | |
| 7. | தாட்கோ தலைவர் விருப்புரிமை நிதி | |
| 8. | இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி | |
| 9. | சட்டப்பட்டதாரிகளுக்கு நிதியுதவி | |
| 10. | தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி–1 முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதி உதவி | |
| 11. | பட்டயக் கணக்கர் / செலவு கணக்கர்களுக்கு நிதி உதவி | |
| 12. | தொழில் தையல் கூட்டுறவுச்சங்கங்களுக்கு நிதியுதவி | |

வேண்டும். விண்ணப்பத்தினை படியிறக்கம் செய்தோ / நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்க வேண்டியதில்லை. விண்ணப்பிக்கும் போது

1. விண்ணப்பதாரர் பற்றிய முழு விவரங்கள்
2. புகைப்படம்
3. இருப்பிடச் சான்றிதழ் எண்.
4. சாதி சான்றிதழ் எண். (எண், வழங்கப்பட்ட நாள், வழங்கியவர் மற்றும் வழங்கப்பட்ட அலுவலகம்).
5. குடும்ப வருமான சான்றிதழ் எண். (எண். வழங்கப்பட்ட நாள், வழங்கப்படுவதற்கான காரணம் – நேர்காணல் நடத்தப்படும் தேதிக்கு 1 1/2 ஆண்டு வரை இருக்கலாம்).
6. பட்டா / சிட்டா – (நிலம் வாங்குதல் மற்றும் நிலம் மேம்பாடு திட்டம்)
7. குடும்ப அட்டை எண்.
8. ஆதார் எண்.
9. விண்ணப்பதாரரின் தொலைபேசி / கைபேசி எண்.
10. விண்ணப்பதாரரின் மின்னஞ்சல் முகவரி (e-mail address).
11. திட்டங்களின் விவரங்கள் முதலியவற்றை இணையதளத்தில் கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டும். ஒன்று முதல் பத்துவரை உள்ள விவரங்கள் இன்றியமையாதவை. தொலைபேசி / கைபேசி எண். மற்றும் மின்னஞ்சல் முகவரி இல்லாதவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படும். மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தவிர, திட்டங்களுக்கு ஏற்றாற்போல் தேவைப்படும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் பெறுவதற்கு அறிவிக்கப்பட்ட நாட்களில் 24 மணி நேரமும் பதிவு செய்யலாம். மேலும், விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மட்டும் பதிவு செய்யலாம். இதற்கான விண்ணப்பம் ஒன்றிற்கு பயனாளியிடமிருந்து ரூ.20/– வசூல் செய்யப்படும். இத்தொகையில் விண்ணப்பங்களை பதிவு செய்வதற்காக பணி அமர்த்தப்படும் தாட்கோ மூலம் பயிற்சி பெற்ற கணினி இயக்குபவருக்கு ரூ.10/– உம், மீதமுள்ள தொகை புகைப்படம் மற்றும் இதர ஆவணங்களை ஸ்கேன் (Scan) செய்து பதிவேற்றம் செய்வதற்காகவும் பயன்படுத்தப்படும். இத்தொகைக்கான கணக்கு பதிவேடு மாவட்ட அலுவலகத்தில் தனியாக பராமரிக்கப்பட வேண்டும். விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் ஒப்புகை ரசீது விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.